1971 ஜுலை 14]

or at least to feel the necessity of asking the Government of Mysore to at least suspend temporarily the construction of the dams and reservoirs that are being constructed across the scheduled streams. Therefore, even after the recommendation made by this House, the stand taken by the Union Irrigation Minister creates a grave apprehension in the minds of the members of this House and also in the minds of the people of Tamil Nadu in their entirety. Therefore, this is a matter of urgent public importance and it is a problem involving the life and death of the people of Tamil Nadu. I, therefore, beg to move that the business of the House may be adjourned to discuss the same.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், சுதந்திராக் கட்சியின் சார்பிலும், முஸ்லிம் லீக் கட்சியின் சார்பிலும் தரப்பட்டுள்ள இந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களை யொட்டி சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

அண்மையில் இந்த மாமன்றத்திலும், மேலவையிலும் தமிழ்நாட்டு மக்களுடைய குரலை எதிரொலிக்கின்ற வகையிலும் தமிழ்நாட்டுக்கு வர இருக்கின்ற ஆபத்தை உணர்த்துகின்ற வகையிலும் மைசூரின் தன்னிச்சை யான போக்கினால் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கே உலை நேரிடக் கூடும் என்ற அச்சத்தைத் தெரிவித்தும், தீர்மானம் ஒன்றினை நம்முடைய பண்பாடும், நாம் கட்டிக் காத்து வருகின்ற நல்ல மரபும் எள்ளளவும் கொடாத அளவுக்கு நிறைவேற்றி அதனை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, மத்திய அரசினுடைய பதில் 15 நாட்களுக்குள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று எதிர்பார்த்து அந்தப் பதிலுக்குப் பிறகு மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர் களுடைய கூட்டத்தைக் கூட்டி, மேலே என்ன நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பது குறித்து ஆராயலாம் என்று அறிவித்தும் காவேரி நீர்த் தகராறில் நம்முடைய உணர்வுகளை எடுத்துக் காட்டி இருக்கிறோம்.

ஆனால் அதற்கிடையில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பதிலுரை பகர்ந்த மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் அளித்திருக்கிற பதில் நமக்கு அதிர்ச்சி தரக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அவர்கள் நடுவர் தீர்ப்புக்கு விடுகிற இந்தப் பிரச்னையில் காலதாமதம் செய்வது மாத்திரமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதுபோல், நடுவர் தீர்ப்புக்கே இவர்கள் விடாத ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பது போன்று பொருள் ஒலிக்கிற வகையில்தான் திரு. கே. எல். ராவ் அவர்களின் பதில் அமைந்திருக்கிறது.

அவர்களுடைய பதிலில் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஆறுகளில் கட்டப்படுகிற அணைகளில் மத்திய அரசின் ஒப்புதலைப் பெறுமலும் ஒப்பந்தங்களில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று மாநில அரசுகளின் முன் இசைவைப் பெறுமலும் அந்த அணைகள் கட்டப்படுகிறதே என்பதைப் பற்றி எந்தப் பதிலும் அவர்களது உரையில் இருப்பதாகத் தெரியவில்லை. அது தெரியாதது மட்டுமல்ல. அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிற ஆறுகளில் கட்டப்படுகிற அணைகளுக்கு நாம் அனுமதி வழங்குவது என்பது சிரமமானது என்று கூறிவிட்டு ஆனால் அதே நேரத்தில் பட்டியலில் சேர்க்கப்படாத

ஆறுகளில் சேர்க்கப்படுகிற அணைத் திட்டங்களுக்கு மத்திய அரசு கன்கரன்ஸ் ஒப்புதல் வழங்கும் என்று கூறியிருப்பது குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறித்த கதையாகத்தான் இருக்கிறது. வெந்த புண்ணில் வேலைச் சொருகுவதுபோல் திரு. கே. எல். ராவ் அவர்களின் பேச்சு அமைந்திருக்கிறது என்பதை நான் தமிழக மக்களின் சார்பாக மிகுந்த வருத்தத்தோடு சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் பேச்சுக் குறிப்பில் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் :

So far as the clerance of projects in the non-scheduled rivers in the Cauvery basin is concerned, that will be done and there is no difficulty about it. '

என்று குறிப்பிட்டு விட்டார்கள். பிறகு,

' As regards the Clearance of projects in the scheduled rivers this is a matter on which the Government of India has got to be very careful. They have got to satisfy all the requirements of everybody. Unless there is general agreement between the three parties, it will not be possible to clear the projects on the Scheduled rivers. '

என்று ஷெடியூல்ட் ஆறுகளில் அந்த அணைகளைக் கட்டுவதற்கு மூன்று மாநில அரசுகளுடைய, இந்த மூன்று தொடர்புடைய கட்சிக்காரர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்தாக வேண்டும், அதில்லாமல் ஒப்புதல் அளிப்பதற்கு இயலாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இங்கு எழுப்புகிற கேள்வி எல்லாம் மூன்று பேர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளாமல் ஒப்புதல் அளிக்க முடியாது என்று கூறுகிறார்கள்; ஒப்புதல் பெறாமல் கட்டிக் கொண்டு போகிறார்கள் அவர்கள், அதற்கு இவர்கள் இதுவரையில் என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்பதுதான் நம் கேள்வி. தூங்குகிறவன் தொடையில் கயிறு திரிப்பது என்று சொல்வார்கள். இப்போது மத்திய அரசாங்கம் விழித்துக் கொண்டிருப்பதுபோல் காட்டிக் கொள்கிறது. ஆனால் அவர்கள் தொடையில் கயிறு திரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இந்த நிலையில் தமிழக அரசின் சார்பில் நாம் நிறைவேற்றியிருக்கிற தீர்மானம் நாடாளுமன்றத்தில் எள்ளி நகையாடப்பட்டிருக்கிறது என்பதை இம் மாமன்றத்தின் மூலம் தலைவர் அவர்களே, உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து அது இந்தப் பேரவையையே அவமானப்படுத்தியதாகக் கருதுகிறேன். அதற்கு தங்கள் கருத்தினையும், இந்தப் பேரவையின் உணர்ச்சிகளையும், பெருமைகளையும் காப்பாற்றுகிற அளவிற்கு தாங்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கு மைசூர் மாநில நாடாளுமன்ற உறுப்பினர் பேசும்போது

' Why should the Tamil Nadu Government come forward and create *hulla gulla*, I do not understand. The Agreement is subsisting till 1974. So, why should they make this *gullatta* and *hulla gulla*.'

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் 'ஹல்லா ஹுல்லா' என்பது என்னவென்று தெரியவில்லை. கலாட்டா என்பது புரிகிறது. இரண்டு வார்த்தைகளுமே ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் தான், தமிழக அரசு இங்கே ஒரு

தீர்மானத்தை நிறைவேற்றுகிறது என்றால் அதை ஹல்லா ஹல்லா, கலாட்டா என்று இரண்டு வார்த்தைகளைப் பயன்படுத்தி இந்த அரசின் சார்பில் இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கலாட்டா தீர்மானம் என்பது போலவும் ஹல்லா ஹல்லா என்றும் உபயோகிக்கத் தகாத வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்தி இங்கு ஒரு குழப்பமான வெறும் வாட்டுக் கூச்சல் எழுப்புகிற கலாட்டாத்தனமான ஒரு நிலைமையில் தமிழக அரசு தீர்மானம் செய்திருக்கிறது என்ற அளவில் நாடாளுமன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது, அது இந்த பேரவையில் தீர்மானத்தை நிறைவேற்றிய அத்தனை உறுப்பினர்களுடையவும் உரிமைகளையும் பாதிப்பதைப் போல்தான் எனக்குத் தோன்றுகிறது. ஆகவே, இந்தப் பேரவையின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய இந்த மன்றத்தின் தலைவராக உள்ள தாங்கள் அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள் என நான் கருதுகிறேன்.

திரு. கே. எல். ராவ் அவர்கள் பேசும்போது இன்னொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதல் அமைச்சர்கள் மாநாட்டை பலமுறை கூட்டி இப்போது புதிதாக மூன்று மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நான் அழைத்துப் பேசப் போகிறேன் என்று கூறியிருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் குறைத்து மதிப்பிடவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களோடு பேசுவதையும் நான் குறைவானது என்று கூறிட விரும்பவில்லை. முதல் அமைச்சர்கள் மட்டத்தில் பேசப்படுகிறபோது கிடைக்கும் புள்ளி விவரங்களை விட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் பேசப்படுகிற நேரத்தில் என்ன அதிகமான புள்ளி விவரங்கள் கிடைத்து விடும் என்று எனக்குத் தெரியவில்லை. முதல் அமைச்சர்கள் கூடுகிற நேரத்தில் அந்தந்த அரசிற்குரிய பொறியாளர்கள் அந்தந்த அரசுக்குரிய அதிகாரிகள் அனைவரும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளக்கூடிய நல்ல சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த நேரங்களை எல்லாம் தவற விட்டு விட்டு திரு. ராவ் அவர்கள் அவர்களே வெளிப்படையாக எனது முயற்சி தோற்றுவிட்டது. பேச்சுவார்த்தை முறிந்து விட்டது என்று அறிவித்த பிறகு மறுபடியும் நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் அழைத்துப் பேசப் போகிறேன் என்பது காலதாமதம் செய்வதற்காக ஒரு சாமாளிப்பான வார்த்தையாகத்தான் எனக்குத் தோன்றுகிறதே தவிர வேறு அல்ல.

ஆகவே, நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசப் போகிறேன் என்று குறிப்பிடுவது தஞ்சை, திருச்சியில் இருக்கிற, தமிழ்நாட்டில் இருக்கிற விவசாயிகளுடைய பிரச்னையை அவர்கள் மறந்து விட்டு இதை ஒரு அரசியல் ரீதியில்தான் கவனிக்கிறார்கள் என்பதை எண்ண எண்ண வருந்தாமல் இருக்க முடியாது.

அங்கு நமது நாடாளுமன்ற உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் குறுக்கிட்டு ஒன்றை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த நியாயமான வாதத்திற்கு நாடாளுமன்றத்தில் திரு. ராவ் அவர்கள் எந்த பதிலும் சொல்லவில்லை. 1956-ம் ஆண்டு இன்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்டை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டி. 1956-ம் ஆண்டு இன்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் செக்ஷன் 4-ல்

'When any request is received from any State Government in support of any water dispute and the Central Government is of opinion that the water dispute cannot be settled by negotiation,

the Central Government shall by notification in this official Gazette constitute a Water Dispute Tribunal for the adjudication of the water dispute. '

என்றிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அவர்கள் பேசிய நேரத்தில் அதற்கும் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் எந்த விடையும் பகர்ந்தாரில்லை.

திரு. கே. எல். ராவ் அவர்கள் பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வேளை தனக்கு மேல் மட்டத்தில் உள்ளவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை, ஆகவே இன்னும் பேச்சுவார்த்தைகளுக்கு இடம் இருக்கிறது என்று கருதுவார்களேயானால் இந்திய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மைசூரில் நடைபெற்ற தேர்தலின் போது வெளிப்படையாகவே ஒரு கூட்டத்தில் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். நடுவர் தீர்ப்பைத் தவிர இந்தக் காவிரிப் பிரச்சினைக்கு வேறு வழியில்லை என்று இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இவ்வளவிற்கும் பிறகு நாம் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை மதிக்க வேண்டுமென்று கேட்பது நியாயத்திற்கு புறம்பானதா? நீங்கள் அணைகளைக் கட்டிக்கொள்ளுங்கள், எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் எங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் பாதிக்கப்பட்டால் அதற்கு உத்தரவாதம் கொடுங்கள் என்று கேட்பது நியாயத்திற்குப் புறம்பானதா என்பது தெரியவில்லை. ஆகவே நியாயத்தைச் சந்திக்க மத்திய அரசு இன்று தவறியிருக்கிறது என்பதை நானும் எடுத்துக் காட்ட அந்த அளவிற்கு இங்கு தரப்பட்டிருக்கிற ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் இந்த எண்ணங்களைத் தர வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பதால் ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மேலும் இதுபற்றிய விவாதத்தை விரைவில் நடத்துவதற்கு அனைத்துக் கட்சிகள் கூட்டத்தைக் கூட்ட இருப்பதால் இந்தத் தீர்மானத்தை இதற்கு மேல் விவாதிப்பதற்குத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன் என தலைவர் அவர்களே, தங்களிடம் எடுத்துச் சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு தேவையில்லை என்று நான் கருதுகிறேன். எனவே இந்தத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## 4. அவையுரிமை மீறல்

### மக்களவையில் திரு. சிவப்பா அவர்கள் காவரி நீர்த் தகராறு பற்றி தமிழ்நாட்டின் நிலை குறித்து விமர்சித்து உபயோகித்த வார்த்தைகள் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தம் விளக்கத்தைச் சொல்கிறபோது லோக் சபாவில் நடைபெற்ற விவாதத்தில் கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த லோக் சபா உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சில வார்த்தைகள் இந்த மன்றத்தினுடைய மதிப்பைக் குறைப்பதாக எடுத்துச் சொன்னார்கள்.